DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : பசுபதி | Father/Husband Name : கோவிந்தராஜ் |
| Age : 36 | Village : சாத்தூர், கீழக்காந்தி நகர் |
| Taluk : | Calling : ஓட்டுநர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Nov 5, 2025 12:40 PM

(Accused Present)

**முதல் விசாரணை :-**

1. நான் சாத்தூரில் குடியிருந்து வருகிறேன். டாடா ஏஸ் வாகன ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் வாகன விபத்தில் இறந்துபோன கருப்பசாமியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்.

2. கடந்த 26.10.2019 ம் தேதி இரவு சுமார் 07.00 மணி முதல் 07.20 மணி இருக்கும். நான் வெள்ளக்கரை ரோட்டில் நின்று அ.சா.1 மற்றும் மாரிமுத்து ஆகியோருடன் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது கருப்பசாமி சாத்தூர் – கோவில்பட்டி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் SSS காம்ப்ளக்ஸை கடந்து கிழக்கு நெடுஞ்சாலையில் மேற்கிலிருந்து கிழக்காக நடந்து வந்து கொண்டிருக்கும்போது மதுரை ரோட்டிலிருந்து கோவில்பட்டி நோக்கி அதிவேகமாக வந்த மாருதி காரினை ஆஜர் எதிரி ஓட்டி வந்து கருப்பசாமி மீது மோதியதால் கருப்பசாமி காரின் இடது பக்க கண்ணாடியில் மோதி விழுந்தார். சம்பவத்தை பார்த்த நாங்கள் வேகமாக கருப்பசாமியினை நோக்கி ஓடினோம். சம்பவத்தில் கருப்பசாமிக்கு வலது கால் தொடை முறிந்தும், கையிலும் தலையிலும் காயம் ஏற்பட்டிருந்தது. இந்த சம்பவத்னை நானும், அ.சா.1 மற்றும் மாரிமுத்து ஆகியோர்கள் நேரில் பார்த்தோம்.

3. நாங்கள் ஆஜர் எதிரி ஓட்டி வந்த காரினை நிறுத்தினோம். எதிரியும் காரினை நிறுத்திவிட்டார். காயம்பட்ட கருப்பசாமியை தனியார் அவசர ஊர்தியில் சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தோம். பின்னர் மருத்துவர் இரவு 08.00 மணிக்கு சிகிச்சை பலனளிக்காமல் கருப்பசாமி இறந்துவிட்டார் என்று கூறினார். பின்னர் நடந்த சம்பவத்திற்கு நானும், அ.சா.1 ம் சாத்தூர் நகர் காவல்நிலையத்தில் புகார் மனு அளித்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். விபத்து நடைபெற்ற மறுதினம் கருப்பசாமியின் உடல் மீது உடற்கூறாய்வு நடைபெற்றது. கார் வேகமாக வந்ததே விபத்துக்கு காரணம். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

4. நாங்கள் இந்த வழக்கு சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்த பிறகுதான் போலீசாருக்கு இந்த வழக்கு விபத்து நடைபெற்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். புகாரை யார் எங்கு வைத்து எழுதினார்கள் என்றால் நான்தான் காவல் நிலையத்தில் வைத்து எழுதினேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 7 ம் வகுப்பு

படித்துள்ளேன். அ.சா.ஆ.1 புகாரில் உள்ளது என்னுடைய எழுத்து என்றால் சரிதான். நான் சேர்மராஜ் ஆகியோர் சாத்தூர் அரசு மருத்துவமனையில் நின்று கொண்டிருந்தபோது போலீசார் அங்கு வந்து எங்களை விசாரித்தார்கள் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடைபெற்ற பிறகு அன்றைய தினமே சாத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் எங்களை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அங்கு வைத்து போலீசார் எங்களிடம் புகார் வாங்கினார்களா என்றால் இல்லை. வழக்கு சம்பவம் நடைபெற்றது தொடர்பாக மட்டும் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான்.

5. எதிரியின் பெயர் மற்றும் விலாசம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் எழுதிய புகார் எதிரியின் விவரத்தை எவ்வாறு கூறினேன் என்றால் புகார் கொடுக்க சென்றபோது எதிரி காவல் நிலையத்தில் இருந்தார், அவருடைய விபரத்தை போலீசார் கூறியதன் அடிப்படையில் புகாரில் எழுதினேன். சம்பவ இடத்தில் இருந்து எதிரியை காவல் நிலையத்திற்கு எதிரே எவ்வாறு சென்றார் என்றால் நாங்கள் மருத்துவமனைக்கு காயம்பட்ட கருப்பசாமியை அவசர ஊர்தி வாகனத்தில் அழைத்து சென்று விட்டோம், எதிரி எவ்வாறு காவல் நிலையத்திற்கு வந்தார் என்று தெரியாது. அவசர உறுதி வாகனத்திற்கு யார் போன் செய்தது என்றால் நான் தான் போன் செய்தேன். நான் அவசர ஊர்தி வாகனத்திற்கு போன் செய்த விபரம் சேர்மராஜ்க்கு தெரியும் என்றால் சரிதான்.

6. வழக்கு விபத்து நடைபெற்ற பிறகு அந்த இடத்தில் எங்களைத் தவிர வேறு யாரும் இல்லை என்றால் சுமார் 50 நபர்கள் கூடிவிட்டார்கள். வெள்ளைக்கரை ஜங்சன் என்ற பகுதி நான்கு வழி சாலைக்கு கிழக்கு புற சாலைக்கு கிழக்கு பக்கம் இருக்கிறது என்றால் சரிதான். SSS காம்ப்ளக்ஸ் நான்கு வழி சாலையின் மேற்குப் பக்கம் சாலைக்கும் மேற்கே இருக்கிறது என்றால் சரிதான். SSS காம்ப்ளக்ஸ் பகுதியில் இருந்து வெள்ளக்கரை சாலைக்கு வர வேண்டும் என்றால் நான்கு வழி சாலையில் போடப்பட்டுள்ள பாலத்திற்கு அடியில் உள்ள சாலை வழியாக தான் வர வேண்டும் என்றால் சரிதான். நெடுஞ்சாலை துறையினரால் மேற்படி பாதையை தவிர வேறு பாதை வெள்ளக்கரை சாலைக்கு செல்லக்கூடிய பாதை அமைக்கப்படவில்லை என்றால் அந்த காலத்தில் சாலையின் குறுக்கே தடுப்புகள் அமைக்கப்படவில்லை.

7. நாங்கள் நின்ற பகுதியிலிருந்து விபத்து நடைபெற்ற இடம் எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்றால் சுமார் 20 அடி தூரம் இருக்கும். இந்த வழக்கு விபத்து நடைபெற்ற போது வாகனத்தை ஓட்டி வந்த நபர் வடக்கே இருந்து தெற்கு பக்கம் சென்றார் என்றால் சரிதான். இறந்து போன நபரை எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். அவருக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் சரிதான். விபத்து நடைபெற்ற பிறகு அவரை தூக்கும்போது அவர் மீது மது வாடை அடித்ததா என்றால் இல்லை. வழக்கு சம்பவத்திற்கு முன்பு அவர் மது அருந்தியிருந்தார் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. இறந்து போன நபர் மது போதையில் சாலையின் மேற்கு பக்கத்திலிருந்து கிழக்கு பக்கம் திடீரென கடந்து சென்றதால் தான் வழக்கு விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல, வழக்கு விபத்து நடைபெற்ற காலத்தில் அந்த சாலையில் தடுப்புகள் அமைக்கப்படவில்லை என்பதால் நிறைய நபர்கள் சாலையை மேற்கிலிருந்து கிழக்கே கடந்து சென்று கொண்டிருந்தார்கள். விபத்து அதிகமாக நடைபெற்றதால்தான் சாலையில் தடுப்புகள் அமைக்கப்பட்டது. இவ்வழக்கு விபத்திற்கு

முன்பாகவே சாலையில் தடுப்புகள் அமைக்கப்பட்டு விட்டது என்றால் சரியல்ல.

8. எதிரி அவருடைய வாகனத்தை நிறுத்தியதாக நான் கூறும் நிலையில் அவர் வாகனத்தை எந்த பக்கமாக நிறுத்தினார் என்றால் தலைக்கு கிழக்கு பக்கமாக நிறுத்தினார். இந்த வழக்கு விபத்து நடைபெறும் போதை காயம்பட்ட நபர் அ.சா.1 சேர்மராஜ் என்பவரின் தந்தை என்பது தெரியுமா என்றால் அவரை விபத்திற்கு பிறகு தூக்கும் போது தான் தெரியும். நான்தான் விபத்து ஏற்படுத்திய காரை நிறுத்தினேனா என்றால் நாங்கள் காயம்பட்ட கருப்பசாமியை தூக்கும்போது காரை ஓட்டிய எதிரி காரை நிறுத்திவிட்டு வந்துவிட்டார்.

9. வழக்கு விபத்து நடைபெற்ற பகுதி வளைவான பகுதி என்றால் இல்லை. வழக்கு விபத்து நடைபெற்றது வளைவான பகுதி என்றாலும், நான் அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அது வளைவான பகுதி என்பதால் அங்கு செல்லக்கூடிய வாகனம் மெதுவாகத்தான் செல்ல முடியும் என்றாலும், எதிரி வேகமாக ஓட்டி வந்ததாக நான் வழக்கிற்காக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி எவ்வளவு வேகத்தில் அவருடைய வாகனத்தை ஓட்டி வந்திருப்பார் என்றார் சுமார் 90 கிலோ மீட்டர் வேகத்தில் ஓட்டி வந்திருப்பார். வழக்கு விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த நபர் 90 கிலோ மீட்டர் வேகத்தில் வாகனத்தை ஓட்டி வரவில்லை என்றால் சரியல்ல.

10. வழக்கு விபத்தில் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் இடது பக்க கண்ணாடி சேதமாகி இருந்தது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரணை செய்தபோது இந்த விபரத்தை நான் கூறினேனா என்றால் கூறினேன். வழக்கு விபத்தின் போது ஆஜர் எதிரி விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு விபத்தில் இறந்து போன நபரின் கவன குறைவா தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு விபத்து நடைபெற்ற போது நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 சேர்மராஜ் எனக்கு உறவினர் என்பதால் அவருடைய தந்தையின் இறப்பு தொடர்பான வழக்கில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Nov 5, 2025 1:08 PM

Judicial Magistrate 2, Sattur